பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 05 2024 7 15

வெள்ளிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவைத் தேர்தலுக்கான 6ஆம் கட்ட வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

- எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

- பழங்குடியினரை பாதுகாக்கும் விதமாக கொண்டுவரப்பட்ட வன உரிமைச் சட்டத்தை பிஜேபி அரசு பலவீனப்படுத்தி இருப்பதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ளார்.

- நடப்பு நிதியாண்டில் இதுவரை 2 கோடியே 62 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- **Lyon** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

  - *----இனி விரிவான செய்திகள்---*

<<<<>>>>

மக்களவைத் தேர்தலுக்கான 6ஆம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

இதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தேர்தலை சுமுகமாவும், நேர்மையாகவும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குடிநீர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள் வசதி உட்பட வாக்காளர்களுக்குத் தேவையான வசதிகள் வாக்குச்சாவடிகளில் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

மேலும் அதிக வெப்பம் நிலவும் சூழலில் அதனை சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் பணியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணிக்கு முடிவடைகிறது.

பீகாரில் 8 தொகுதிகள், ஹரியானாவில் 10, ஜார்கண்டில் 4, தில்லியில் 7, ஒடிசாவில் 6, உத்தரப்பிரதேசத்தில் 14, மேற்குவங்கத்தில் 8, ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதி உட்பட நாளை 58 மக்களவைத் தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் அனந்த்நாக் - ரஜோரி - பூஞ்ச் மக்களவைத் தொகுதியில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மத்திய துணை ராணுவப் படை, ஜம்மு-கஷ்மீர் ஆயுதப்படை, இந்திய ரிசர்வ் போலீஸ் படையை சேர்ந்த 150 கம்பெனிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்களவைக்கான 7ஆம் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பஞ்சாபில் உள்ள தினாநகரில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு பேசினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

அரசியல் சாசனத்தின் 370வது பிரிவை ஜம்மு-கஷ்மீரில் மீண்டும் கொண்டுவரும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டு வருவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே இன்று ஜார்கண்ட் மாநிலம் தியோகரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் பழங்குடியினரை பாதுகாக்கும் விதமாக கொண்டுவரப்பட்ட வன உரிமைச் சட்டத்தை பிஜேபி அரசு பலவீனப்படுத்தி இருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஜனநாயகமும், அரசியல் அமைப்பும் சுயமரியாதையுடன் வாழ்வதற்கான உரிமையை வழங்குவதாகவும், அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் தமது கூட்டணியில் உள்ள கட்சிகள் ஈடுபட்டு வருவதாகவும் திரு. மல்லிகார்ஜுன் கார்கே குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், ஜார்கண்ட் மற்றும் பீகார் மாநிலங்களில் பிஜேபி அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகி வருவதாக தெரிவித்தார்.

இடஒதுக்கீட்டை அகற்றும் முயற்சியில் பிஜேபி ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா இன்று ஜார்கண்டில் உள்ள ஜம்தாராவில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சிகள் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியின சமூகத்தின் வளர்ச்சிக்கு பிஜேபி பெரும் பங்காற்றியுள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி இன்று பஞ்சாபில் உள்ள நவன்ஷர் நகரில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிஜேபி ஆட்சியில் விவசாயிகள் துயரத்தை எதிர்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. சச்சின் பைலட் இன்று பஞ்சாபில் உள்ள அனந்த்புர் சாஹிப் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும் என்று திரு. சச்சின் பைலட் கூறினார்.

<<<<>>>>

இந்த ஆண்டின் ராபி பருவத்திற்கான கோதுமை கொள்முதல் சுமுகமான முறையில் நடந்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2024-25ஆம் நிதியாண்டில் இதுவரை 2 கோடியே 62 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் அதிக அளவு கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு கோதுமையின் மொத்த கொள்முதல் 2 கோடியே 62 லட்சத்து 2 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்தது.

இந்த ஆண்டு இதுவரை 7 கோடியே 28 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகவும், இதனால் 98 லட்சத்து 26 ஆயிரம் விவசாயிகள் பலனடைந்திருப்பதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

ரஷ்யாவின் மாஸ்கோவில் உள்ள அரங்கு ஒன்றில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் 144 பேர் உயிரிழந்தனர். 551 பேர் காயமடைந்தனர்.

இந்த தீவிரவாத தாக்குதலில் யுக்ரைன் ராணுவ உளவுப் பிரிவுக்கு தொடர்பிருப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

கிர்கிஸ்தானில் உள்ள **Bishkek** நகரில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் இதனை அந்நாடு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா வெகு வேகமாக முன்னேறி வருவதாகவும், விரைவில் உலகின் 3வது பெரிய பொருளாதார நிலையை எட்டும் என்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

தில்லி விஞ்ஞான் பவனில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், செமிகண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர் திரு. நிதின் அகர்வால், எல்லைப்புறத்தில் இருக்கும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு முறையில் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித் தொகுப்பாளர்களை, தூர்தர்ஷன் கிசான் தொலைக்காட்சி அறிமுகம் செய்ய உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை விதிப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளப்போகிறது என்பதை தமிழக அரசு விளக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம், ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகளுக்கு பொருந்தாது என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தீர்ப்புக்கு எதிராக கடந்த 6 மாதங்களாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகாதது ஏன் என்றும் திரு. ராமதாசு வினவியுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கு அடுத்த மாதம் 10ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த விடுமுறைக்கு முன்பாக உடனடியாக தீர்வுகாண வேண்டிய

குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் இந்த 15 நாள் கோடை விடுமுறை **Kistwar, Doda, Ramban, Kathua** மாவட்டங்களுக்கான குறிப்பிட்ட நீதிமன்றங்களுக்கு இந்த உத்தரவு பொருந்தாது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

**Lyon** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில இந்த இணை, 6-3, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Roger Vasselin** – மெக்சிகோவின் **Santiago Gonzalez** இணையை வென்றது.

---------------

ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதிச் சுற்றுப் போட்டி தாய்லாந்தின் பாங்காக்கில் இன்று தொடங்கியது.

இந்தியா, நியூசிலாந்து உட்பட 133 நாடுகளைச் சேர்ந்த 579 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

57 கிலோ எடைப்பிரிவுக்கான முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சச்சின் சிவாச், நியுசிலாந்தின் **Alex Mukuka**-வை 5-0 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தார்.

-----------

ஐபி.எல். கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறும் இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

------------------

பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-7, 11-4, 11-4, என்ற செட் கணக்கில் கத்தாரின் **Yousef Essam Farag**-ஐ வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் **Abhay Singh** 11-2, 11-9, 15-13 என்ற செட் கணக்கில் பாகிஸ்தானின் **Muhammed Asim Khan**-ஐ வென்றார்.

----------------

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தென்கொரியாவின் **Yecheon**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், சீன தைபேயின் **Gokkir**-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Jyothi Surekha Bennan – Priyansh** இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை, தென்கொரியாவின் **Han Seungyeon – Yang Jaeweon** இணையை வென்றது.

**<<<<the end>>>>**